**உயர் நீதிமன்ற வழக்கு இலக்கம் SCFR 165/2007 வழக்குத் தீர்ப்பிற்கமைய இலங்கை கல்வி நிருவாக சேவையின் 11ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கு**

**<u>1ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்கல்</u>**

அரச சேவை ஆணைக்குழு சபையினால் வழங்கப்பட்ட உத்தரவுக்கமைய இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் 1ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதற்காக தகைமை பெறும் இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் 11ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் மற்றும் விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பெயர்ப்பட்டியலுக்கமைய இலங்கை கல்வி நிருவாக சேவையின் 1ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக தகைமைபெறும் உத்தியோகத்தர்களினால் இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் பிரமாணக் குறிப்பின் 18வது பிரிவின் மீது மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புகள் தொடர்பாக கவனம் செலுத்தி உரிய மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட தமது விண்ணப்பப்படிவத்தை தாபனப் பொறுப்பாளரினால் உறுதிசெய்து தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உறுதிப்படுதுதப்பட்ட சான்றிதழ்களின் பிரதியுடன் 2009.03.12ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் திருமதி.ஏ.டீ.எஸ்..சதீக்கா, உதவிச் செயலாளர், கல்விச் சேவைத் தாபனக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கல்வி நிருவாக சேவையின் 1ஆம் வகுப்பிற்கு உதவி பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்'' எனக் குறிப்பிடவும்.

இப்பெயர்ப்பட்டியல் சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஏதாவது தகவல்கள் அவசியப்படின் கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரியுடன் தொடர்புகொண்டு வினவ முடியும்.

**011 2787330**
உதவிச் செயலாளர்
(கல்விச் சேவைத் தாபனம்)

**எம்.எம்.என்.டீ. பண்டார**
கல்விச் செயலாளர்,
கல்வி அமைச்சு,
2009.02.26